**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**

**NAGAPATTINAM.**

**S.C.30/2019 – P.W. – 17**

Deposition of witness for Prosecution:

Name : திரு. செந்தில்வேலன் Father's Name. ராஜு

Village : விருதுநகர் Age: 55

Date : 06.06.2025

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 06.06.2025.

**(8ம் எதிரி ஆஜர்.)**

**அரசு தரப்பு முதல் விசாரணை**.

நான் தற்போது விருதுநகர் மாவட்டம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில், பறக்கும்படை வட்டாரப் போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.01.2010ஆம் தேதி பகல் 01.00 மணியளவில் நான், நாகப்பட்டினம் வட்டார போக்குரவத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை – I ஆக பணியில் இருந்தபோது, வாய்மேடு காவல் நிலைய குற்ற எண்.9/2010, இ.த.ச.பிரிவுகள் 147, 148, 323, 324, 307 மற்றும் தமிழ்நாடு பொது சொத்துக்கள் (சேதப்படுத்துதல் மற்றும் நஷ்டப்படுத்துதல்) தடுக்கும் சட்டம் பிரிவு 3(1)–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கு சம்பந்தமாக TN 50 H 0099 என்ற டாடா சலோன் 2008 LMV காரினை ஆய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கும்படி, மேற்படி காவல் நிலைய காவல் ஆய்வாளர் வேண்டுகோள் கடிதம் கொடுத்தார்.

அதன் அடிப்படையில், அன்று பகல் 01.30 மணியளவில் நாகப்பட்டினம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் முன்பு வைத்து மேற்படி வாகனத்தை ஆய்வு செய்தேன். ஆய்வின்போது, மேற்கண்ட வாகனத்தின் முன்புற பெரிய கண்ணாடி வலதுபுறம் உள்நோக்கி அழுந்தியும், விரிசல் அடைந்தும் காணப்பட்டது. பின்புறம் பெரிய கண்ணாடி உடைந்து காணப்பட்டது. பின்வலதுபுற பிக்சடு கண்ணாடி உடைந்து காணப்பட்டது. முன் இடதுபுற பம்பர் மூளைபகுதி உள்நோக்கி அழுந்தியும்,

முன்இடதுபுற சக்கரத்தின் மட்கார்டு சேதமடைந்தும் காணப்பட்டது. மேற்கண்ட சேதாரங்களின் தோராய மதிப்பிலான ரூ.5,500/– என்று சான்று வழங்கினேன். அந்த சான்று **அ.சா.ஆ.4**. ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்.

**8ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**.

போலீசார் என்னை விசாரித்தபோது TN 50 H 0099 என்ற டாடா சலோன் 2008 LMV காரினை ஆய்வு செய்ததாகதான் சொல்லியுள்ளேனா ? என்றால் ஆமாம். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்து பதிவு செய்ததாக சொல்லப்படும் குவிமுச பிரிவு 161–ன் படியான வாக்குமூலத்தில் நான் TN 51 A 7117 என்ற டாடா சுமோ வாகனத்தை ஆய்வு செய்து ஆய்வறிக்கை வழங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எந்தவித வாகனத்தையும் பார்வையிடாமல், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க அ.சா.ஆ.4 ஆன சான்றிதழில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்ததால், அதில் ஒரு வாகனத்தை ஆய்வு செய்ததாகவும், குவிமுச பிரிவு 161–ன் படியான வாக்குமூலத்தில் வேறு ஒரு வாகனத்தை ஆய்வு செய்ததுபோலவும், வாக்குமூலம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**